DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.I, MADURANTAKAM

Calender : CC 100/2020
Miscellaneous :
Sessions : PW.1
Deposition of Witness for

பெயர் ஜோதிகா

கணவர் பெயர் முத்துகிருஷ்ணன்

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 28-12-2022

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1.) என்னை தவிர எனது கணவர் எதிரிக்கு ரூபாய் 30 லட்சம் கடன் கொடுத்திருக்கிறார். வட்டிக்கு பணம் கொடுப்பதற்காக அரசாங்கத்திடம் உரிமம் வாங்கியிருக்கிறேனா என்றால் இல்லை. எதிரி எனது வங்கி கணக்கிற்கு பணம் ஏதேனும் செலுத்தியிருக்கிறாரா என்றால் இல்லை. வழக்கு காசோலைகள் தவிர வேறு காசோலை எதுவும் எதிரி கொடுக்கவில்லை. எனக்குதரவேண்டிய தொகையை என்னுடைய கணவர் வங்கி கணக்கிற்கு அனுப்பியிருக்கிறார் என்றாலும் அதனை மறைத்து பணம் அனுப்பவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

2.)எதிரி எனக்கு வழக்கு காசோலை வழங்கவில்லை என்றாலும் எனது கணவருக்கு கொடுக்கப்பட்ட காசோலையை நான் தவறாக பயன்படுத்தியிருக்கிறேன் என்றால் சரியல்ல. எனது கணவர் கையொப்பம் செய்யப்பட்ட பூரத்தி செய்யப்படாத 25 காசோலைகள் மற்றும் கையொப்பம் செய்யப்படாத பூர்த்தி செய்யப்பட்ட 5 பாண்டுகளை பெற்றிருக்கிறார் என்றாலும் சரியல்ல. 2019 நவம்பர் முதல் ஏப்ரல் 2020 வரை அசல் தொகை 3 லட்சத்து 60 ஆயிரத்தை எதிரி செலுத்தியிருக்கிறார் என்றால் இல்லை.

3.)2020 மே முதல் டிசம்பர் 2021 வரை அசல் தொகை 40 ஆயிரமும் 19 மாசத்திற்கான வட்டி தொகை 7 லட்சத்து 60 ஆயிரம் வங்கி கணக்கு மூலம் எதிரி எனது கணவரின் வங்கி கணக்கிற்கு செலுத்தியிருக்கிறார் என்றால் இல்லை. 05-02-2020 ல் எனது கணவர் இறந்துவிட்டார். எனது கணவருக்கு வட்டிக்கு பணம் கொடுக்கும் உரிமம் இல்லை. நான் எனது கணவரின் இரண்டாவது மனைவி என்றால் சரிதான். எனது கணவர் உயிருடன் இருந்தவரை நான் நீதிமன்றத்திற்கு வரவில்லை என்றாலும் எனது கணவருக்கு வழங்கப்பட்ட காசோலையை நான் தவறாக பயன்படுத்தி இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல.

4.)எனது கணவருக்கு 6 பைசா வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில் என்றாலும் அவர் இறந்த பிறகு அவருக்கு வழங்கப்பட்ட காசோலையை பயன்படுத்தி தவறாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கும் எதிரிக்கும் நேரடியாக பணபரிமாற்றம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. 20 நாட்கள் காலதாமதமாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதால் வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் பொய் வழக்கு போட்டு பெய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.